*15*

# தயாரிப்பின் காலகட்டம்

### *மத். 3-4:11; மாற். 1:1-13;*
### *லூக். 2:40-4:13; யோவா. 1:19-28*

## I. நாசரேத்தூரில் அமைதியான ஆண்டுகள்.

*முப்பது ஆண்டுகளாக இயேசுவின் இல்லமானது/இருப்பிடமானது நாசரேத்தூரில் இருந்தது. நாட்டுப் புறத்திலிருந்த அந்தச் சிறு கிராமமானது யூதேயா மற்றும் எருசலேமில் இருந்த அதிக கலாச்சாரம் வாய்ந்த யூதர்களால் இழிவாய்க் கருதப்பட்டிருந்தது; மற்றும் இயேசு மறைவில்/இருளில் இருந்து உதித்தெழும்பிய பொழுது, அவரும் அவருடைய சீடர்களும் நசரேயர்கள் என்று இகழ்ச்சியாக அழைக்கப்பட்டனர்.*

*1. **சுவிசேஷங்களில் சுய கட்டுப்பாடு.***—அவரது (இயேசுவின்) தொட்டில், அவரது ஊழியம் மற்றும் அவரது சிலுவை ஆகியவற்றைச் சுற்றிலும் கூடிய (மக்கள்) கூட்டத்தின் நிகழ்ச்சிகளினுடைய வளமைக்கு, இந்த முப்பது ஆண்டுகளின் அமைதி குறிப்பிடத்தக்க வகையில் நேர்மாறாக உள்ளது. ஏவுதல் பெற்றிராத மனிதர்கள் (தனி மனிதர்களின்) வரலாற்றுக் குறிப்பை இவ்விதமாக எழுவதில்லை. அவர்கள், பிள்ளைப் பிராய நிகழ்ச்சிகள், மலருகின்ற மேதையின் அடையாளங்கள் மற்றும் நிச்சயத் தன்மைகள் பற்றி அதிகம் கூற அவற்றில் நிலைத்த கருத்துக் கொண்டுள்ளனர். தள்ளுபடி செய்யப்பட்ட சுவிசேஷங்களின் எழுத்தாளர்கள் இயேசுவின் தொடக்க ஆண்டுகள் பற்றி இவ்விதமான ஆவியைக் கொண்டு எழுதினார்கள். அவரைக் கனப்படுத்துவற்கென்று அவர்கள் தங்கள் (புத்தகங்களின்) பக்கங்களை, நடந்ததாகவும் காலத்திற்கு முந்தியதாகவும் உள்ள அற்புதங்கள் பற்றிய விவரங்களினால் நிரப்புகின்றனர், ஆனால் உண்மையில் அவைகள் அவரைக் கனவீனப்படுத்துபவைகளாகவே உள்ளன. நமது சுவிசேஷங்களின் சுயகட்டுப்பாடானது அவைகளின் வரலாற்றினுடைய உண்மைத்தன்மைக்கும் எழுத்தாளர்களின் ஏவுதல் பெற்ற தன்மைக்கும் நிரூபணமாய் உள்ளது.

***2. கல்வி சார்ந்த செல்வாக்குகள்.***—இயேசு சோம்பேறித்தனத்திலோ அல்லது அறியாமையிலோ வளரவில்லை. அவர் ஒரு தச்சராக, தச்சர் ஒருவரின் புகழ் பெற்ற மகனாக இருந்தார் (மத். 13:55; மாற். 6:3). ஒவ்வொரு யூதச் சிறுவனும் தொழில் ஒன்றைக் கற்றறிந்தனர். குடியானவர்கள் வாசிக்கவும் எழுதவும் கூடியவர்களாயிருந்தனர். அவரது கல்லாமை பற்றிய வசனக் குறிப்பு (யோவா. 7:15) அவர் இரபீக்களின் பள்ளியில் கல்வி கல்லாததை மட்டுமே அர்த்தப்படுத்துகின்றது; நமது கூற்றுப்படி, அவர் ஒரு

*கல்லூரிப் படிப்பு படித்தவரல்ல. அவர் மூன்று மொழிகளில் பழக்கம் கொண்டவராய் இருந்தார்: அவரது தாய் மொழியான அரமாயிக்; வேத வசனங்களின் மூலமொழியான எபிரெயம், மற்றும் இலக்கிய மொழியான கிரேக்கம், வேத வசனங்களின் முழுமையான பிரதியொன்றைச் சொந்த மாய்க் கொண்டிருக்கக் கூடாத அளவுக்கு அவர் ஏழையாய் இருந்திருப் பினும், (அவர் வாழ்ந்த) கிராமத்தின் ஜெப ஆலயம் அவர் அதைப் பெற வழி செய்திருக்கும்; அந்தத் தச்சரின் இல்லத்தில் வேத வசனத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு பிரிவுகள் சொந்தமாக வைத்துக் காக்கப்பட்டும் இருந்திருக்கலாம்.*

***3. எருசலேமுக்கு அவரது வருகை.***—*கல்விக்கான முக்கியமான ஒரு வழி முறை குறிப்பிடப்பட்டுள்ளது (லூக். 2:46-51). அவரது பெற்றோர்கள் ஆண்டுதோறும் பஸ்காவிற்காக எருசலேம் சென்றார்கள். அந்தப் பயண மானது வரலாற்று இணைவுகளில் வளம்மிக்க நாட்டினூடே எண்பது மைல்கள் கடந்து செல்லுவதாக இருந்தது. எருசலேம் நகரம் அதன் மக்களால், வேறு எந்தத் தலைநகரைக் காட்டிலும் மிகவும் அதிகமாய் நேசிக்கப்பட்டது. பல நாடுகளிலிருந்து வந்த பல மொழிகளைப் பேசும் (யூத) மக்கள் அதன் தெருக்களில் நிரம்பி வழிந்து அதன் தேவாலயத்தில் கூட்டமாய்க் கூடினார்கள். மதிநுட்பம் வாய்ந்த, உற்சாகமான ஒரு சிறுவனுக்கு இப்படிப்பட்ட வருடாந்திரப் பயணமானது, தன்னிலேயே ஒரு கல்வியாய் இருந்திருக்க வேண்டும். முப்பது ஆண்டுகளில் ஒரே ஒரு முறைதான் தெளிவின்மையின் திரையானது தூக்கப்பட்டுள்ளது. பன்னிரெண்டு வயது என்பது யூதச் சிறுவனுக்குத் திரும்புமுனையாக இருந்தது. அவர் பன்னிரெண்டு வயதில் (தச்சுத்) தொழிலைக் கற்கத் தொடங்கினார்; "வளர்ந்தவர்" என்றழைக்கப்பட்டார்; இனியும் அவர் தந்தையினால் விற்கப்பட/விருப்பத்திற்குப் பயன்படுத்தப்படக் கூடாத வராயிருந்தார்; தோல் சுருள்களை வைக்கும் பெட்டியை அணியத் தொடங் கினார், மற்றும் "நியாயப்பிரமாணத்தின் மகன்" என்றழைக்கப்பட்டார். இந்தச் சிக்கலான வயதில் இயேசு எருசலேமுக்குத் தமது முதற் பயணத்தை மேற்கொண்டார் என்று காணப்படுகின்றது. அவர் தவறவிடப்பட்ட பொழுது பயணக் குழுவானது வீடு நோக்கிய பயணத்தில் ஒரு நாளை முடித்திருந்தது. அவர்களது பெற்றோர் எருசலேமுக்குத் திரும்பி வந்து ஒரு நாள் முழுவதும் ஏக்கத்தோடு அவரைத் தேடினார்கள். கடைசியில் அவர்கள் அவரைத் தெருவில் (விளையாடும்) பையன்களுடன் காணவில்லை; சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தவராகவும் காணவில்லை, ஆனால் தேவாலயத்தில் நியாயப்பிரமாண வல்லுநர்கள் போதிப்பதைக் கேட்பவராகவும், அவர்களிடத்தில் கேள்வி கேட்பவராகவும் அவரைக் கண்டனர். "நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா?"[1] பதிவு செய்யப்பட்ட அவரது முதல் வார்த்தைகள் இப்படிப்பட்டவைகளாய் உள்ளன, மற்றும் இவை அவரது முழு வாழ்வுக்கும் திறவுகோல் குறிப்பாக உள்ளன. அவர்களுடன் அவர் நாசரேத்தூருக்குத் திரும்பி வந்தாலும், அவர்களுக்குத் தொடர்ந்து கீழ்ப் படிந்திருந்தாலும், ஆண்டுதோறும் எருசலேமுக்குச் சென்ற பயணமானது*

அவரது பண்பு வடிவமைக்கப்படுதல் மற்றும் அவரது திட்டத்தின் பக்குவமடைதல் ஆகியவற்றில் முக்கியமான செல்வாக்கை வகித்தன என்பதில் சந்தேகமில்லை.

இயேசு தமது தெய்வீக இயல்பையும் நபர்த்தன்மையையும் பற்றிய உணர்வடைந்தது எவ்வாறு மற்றும் எப்படி என்று நாம் கேட்காதிருக்க முடியாது. அது அவருக்குள் திடீரென்று மின்னலடித்ததா அல்லது சாதாரணக் குழந்தையிடம் காணப்படும் உணர்வுள்ள நபர்த்தன்மைபோல் படிப்படியாக உதயமாயிற்றா? அது அவரது பிறப்பு பற்றிய அமைதியான இல்ல உரையாடல்களிலிருந்து எழும்பிற்றா அல்லது அவருக்குள்ளாகவே இருந்து வெளிப்பட்டதா? இப்படிப்பட்ட கேள்விகள் நம்மை நமது ஆழத்திற்கப்பாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளவைகளுக்கு அப்பாலும் கொண்டு செல்லுகின்றன. இருப்பினும், அவர் தம் பன்னிரு வயதில் தமது தெய்வீகப் பெற்றோர்த்துவம் பற்றி முழு உணர்வுடையவராயிருந்தார் என்று தெளிவாய்க் காணப்படுகின்றது.

***4. அமைதியான ஆண்டுகளின் பாடங்கள்.***—இயேசு தமது பிதாவுக் கடுத்த அலுவல்களில் மூன்று ஆண்டுகள் மட்டுமே வெளிப்படையாக ஈடுபட்டிருந்தார்; இருப்பினும் அவர் திரளான கூட்டங்களுக்குப் போதித்த வேளையிலும், அல்லது நம் பாவங்களுக்காகச் சிலுவையில் மரித்த பொழுது செய்தது போன்றே அமைதியான (30) ஆண்டுகளிலும் தேவனுடைய ஊழியத்தை உண்மையாகவே செய்து வந்தார். இயேசு என்னவாக இருந்தார் என்பதைக் கொண்டே அவர் செய்தவை அளவிடப்படுகின்றன; அவர் முப்பது ஆண்டுகளில், “ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவனுடைய கிருபையிலும் மனுஷர் தயவிலும்”[2] அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். பண்பு என்பதே உலகின் இன்றியமையாத தேவையாக உள்ளது; மற்றும் நாசரேத்தின் இருளிலிருந்து வெளிவந்த இப்படிப்பட்ட ஒரு மனிதத் துவத்தை உற்பத்தி செய்ததற்கான எந்த ஆண்டும் வீணாக்கப்படவில்லை.

## II. ஸ்நானனின் ஊழியம்.

***1. தீர்க்கதரிசனத்தின் மறுமலர்ச்சி.***—வெளிப்படையான தீர்க்க தரிசனத்தின் கடைசிக் குரல் கேட்கப்பட்டு நான்கு நூற்றாண்டுகள் கடந்து சென்றிருந்தன. கடைசி எபிரெயத் தீர்க்கதரிசியும் (மல். 4:5, 6) மற்றும் ஏசாயாவும் கூட (ஏசா. 40:3), மேசியாவுக்கு முன்னோடியைக் குறித்து முன்னுரைத்திருந்தனர். (யோவானின்) பிறப்பு பற்றிய அறிவிப்பின் போதும், மீண்டும் அவரது பிறப்பின் போதும் யோவான் அம்முன்னோடி யென்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தார். அவரது பிறப்பு மற்றும் விருத்த சேதனம் பற்றிய விவரமான குறிப்பிற்குப் பிறகு, முப்பது ஆண்டுகளுக்கு அவரைப் பற்றிய விஷயங்கள் எல்லாவற்றையும் ஒரே ஒரு வாக்கியத்தில் பதிவு செய்துள்ளதாக உள்ளது (லூக். 1:80). அவர் பிறப்பிலிருந்தே நசரேயனாய்[3] இருக்க வேண்டியிருந்தது (லூக். 1:15; இ.வ. எண். 6:1-5); மற்றும் அவர் பாலை நிலத்திலிருந்து உதித்தெழுந்து வந்த பொழுது, அது பழைய எபிரெயத் தீர்க்கதரிசிகளின் பழக்கத்திலிருந்து வலிவுடன்

பற்றியிழுக்கப்பட்டதாயிருந்தது. நீண்ட காலமாக அவர் தனிமைப் பட்டிருந்ததென்பது, சந்தேகமின்றி, சுய ஒழுக்கக் கட்டுப்பாட்டிலும் அக்காலத்தின் பாவங்கள்மீதான ஆழமிக்க தியானத்திலும் மற்றும் மேசியாவைப் பற்றியும் அவரது இராஜ்யத்தைப் பற்றியும் தீர்க்கதரிசனக் காட்சிகளிலும் செலவிடப்பட்டிருக்கும். அவர் நகரங்களை நாடவில்லை, ஆனால் வனாந்தரத்தில் பிரசங்கித்தார், அது யோர்தான் நதிக்கரையோர மாய் எளிய குடியமர்வுப் பகுதியில் இருந்த நிலையில் செய்யப்பட்டது.

***2. அவரது ஊழியத்தின் வல்லமை.***—அவரது இரண்டாண்டுகள் ஊழியமானது பெரும்பாலான ஐம்பதாண்டுகள் ஊழியத்தைக் காட்டிலும் அதிகமானவற்றை நிறைவேற்றியது. அவர் "ஒரு அற்புதத்தையும் செய்ய வில்லை" (யோவா. 10:41), ஆனால் விரைவிலேயே நாடு முழுவதும் அவரது காலடியின் கீழ் வரப் பெற்றிருந்தது. முரட்டுத்தனமான கிராம மக்கள் மட்டுமின்றி, தலைநகரிலிருந்த பண்பட்ட வேதபாரகர்களும் பரிசேயர் களும் கூட இந்த இரண்டாவது எலியாவின் கூற்றைக் கேட்பதற்கு கூட்டமாய் வந்தார்கள். கடைசியில் தங்கள் ஆத்துமாக்களுக்கான செய்தியுடன் ஒரு மனிதர் வந்திருந்ததாக மக்கள் இங்கு உணர்ந்தார்கள். அவர் அந்த நாட்களின் போதகர்களைப் போன்று வெந்தயம், புதினா, சீரகம் ஆகியவற்றின் கேள்விகள் பற்றியோ, தோல் சுருள் பெட்டிகளின் அகலம் பற்றியோ அல்லது ஓய்வு நாள் பிரயாண தூரத்தின் நீளம் பற்றியோ ஏற்பட்ட கேள்விகளில் தீவிரம் காட்டவில்லை. நாட்டை/இனத்தை வெறுமையிலிருந்து உண்மை நிலைக்குத் திரும்ப அழைப்பித்தல் என்பதே அவரது ஊழியத்தின் ஒரு பாகமாய் இருந்தது. அவர் படை வீரர்களின் வன்முறையை, ஆயக்காரர்களின் பேராசையை, பரிசேயர்களின் மாய் மாலத்தை மற்றும் எல்லாருடைய சுயநலத்தைக் கண்டித்தார் (லூக். 3:10-14).

***3. இராஜ்யம் சமீபித்துள்ளது.***—யோவானின் ஊழியம் தன்னில்தானே முடிந்து போன ஒன்றாயிருக்கவில்லை. அது ஒரு *தயாரிப்பாக* இருந்தது. "மனந்திரும்புங்கள், பரலோக இராஜ்யம் சமீபித்திருக்கிறது"[4] என்பதே அதன் சுமையாய் இருந்தது. அவர் தாம் கிறிஸ்து என்று உரிமைகோர வில்லை, ஆனால் தாம் ஆயத்தக் குரலொலியாய் இருப்பதை உரிமை கொண்டாடினார் (யோவா. 1:19-23). தமது செய்தியை வலியுறுத்து வதற்காக அவர் "மனந்திரும்புதல்" மற்றும் "மன்னிப்புக்கான" ஞானஸ் நானத்தினால் (மக்களை) முழுக்காட்டினார்; அதே வேளையில் "வரப் போகிறவராயிருந்த" மற்றும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்க இருந்தவரை விசுவாசிக்கும்படி மக்களை அழைத்தார் (மாற். 1:7, 8; இ.வ. அப். 19:4). ஆழ்ந்த உறக்கத்திலிருந்த இனத்தை தட்டியெழுப்புதல், அதன் உணர்வைத் துரிதப்படுத்துதல், மேசியா பற்றிய எதிர்பார்ப்பின் ஜுவாலை யைத் தூண்டிவிடுதல், முதலாவது தம் மீது அதனை மையப்படுத்துதல், பின்பு அதை இயேசுவை நோக்கி மாற்றுதல்—இவை போன்றதே அவரது சுருக்கமான ஊழியத்தின் நோக்கமும் விளைவுமாய் இருந்தது.

***4. இயேசு ஞானஸ்நானம் பெறுதல்.***—இயேசு ஞானஸ்நானம் பெறும் நிகழ்ச்சியுடன் உச்சக்கட்டம் வந்தது. பாவம் நிறைந்த கூட்டத்தினருடன் ஒரு நாள், மரியாளின் பாவமற்ற மகன் வந்தார். அவ்விருவரும் (முன்)

எப்பொழுதாவது சந்தித்திருந்தார்களா என்பது பற்றி நாம் அறிவதில்லை. (ஆனால்) அவரை மேசியா என்ற வகையில் யோவான் அதுவரை அறிந்திருந் ததில்லை என்பது உறுதி (யோவா. 1:31-34). ஆனால் பரிசேயரையும் அரசரையும் தைரியமாய் எதிர்கொள்ள வல்லமை கொண்டிருந்த சிங்கம் போன்ற அந்தத் தீர்க்கதரிசி இயேசு என்ற இணையற்ற மனிதத்துவத்திற்கு முன்பாக ஆழ்ந்த தாழ்மையுடன் வீழ்ந்து வணங்கினார்; "நான் உம்மிடத்தில் ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா?"[5] இயேசு பெற்ற ஞானஸ்நானம், நாம் பெற்ற ஞானஸ்நானத்தைப் போன்ற தல்ல; அது "மனந்திரும்புதலுக்கான" ஞானஸ்நானமாகவோ, அல்லது "மன்னிப்புக்கான" ஞானஸ்நானமாகவோ இல்லாதிருந்தது. இருப்பினும் இது யோவான் மற்றும் இயேசு ஆகிய இருவருக்கும் ஆழ்ந்த பொருள் உள்ள தனிச் சிறப்பை அணிவித்தது. யோவானைப் பொறுத்தமட்டில், திறந்த வானமும், இறங்கி வந்த ஆவியானவரும், "இவரே என் நேச குமாரன்"[6] என்ற தெய்வீகக் குரலும், இவரே மேசியா இவருக்கு முன் தாம் சிறுக வேண்டும் என்பதைச் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பித்தன. நமக்குப் போன்றே இயேசுவுக்கும் ஞானஸ்நானம் வாழ்வில் ஒரு திருப்புமுனையைக் குறிப்பிட்டது; ஆவியானவர் பொழியப்பட்டார்; அவரது தெய்வீக மகவுரிமை சொந்தமாக்கப்பட்டது: "தண்ணீருக்குள் மூழ்கும் முன்பாகவே பரிசுத்தமும் சுத்தமுமாய் இருந்த அவர் தண்ணீரிலிருந்து உயர்வான மகிமையின் ஒளியுள்ள முகத்துடன் எழுந்திருந்திருக்க வேண்டும். அவரது கடந்த காலம் மூடப்பட்டது; ஒரு புதிய யுகம் தொடங்கியிருந்தது. அதுவே ஒரு புதிய வாழ்வில் அவர் பிரவேசித்த தருணமாய் இருந்தது. கடந்து சென்ற ஆண்டுகள் யோர்தான் ஆற்றுத் தண்ணீரில் புதைக்கப்பட்டன. அங்கு அவர் மனித குமாரனாகிய இயேசுவாகப் பிரவேசித்து, அதிலிருந்து அவர் தேவனு டைய கிறிஸ்துவாக எழும்பினார்."[7]

**5. சோதிக்கப்படுதல்.**—இயேசு இப்பொழுது தம்முடைய மாபெரும் ஊழியத்தின் நுழைவாயிலில் இருக்கின்றார். முப்பது ஆண்டுகளினூடாக அவரது மனித இயல்பானது தெய்வீகத்திற்குத் தகுதி வாய்ந்த ஒரு கருவியாகப் பக்குவப்பட்டிருந்தது. அவரது திட்டங்களும் அதே அளவுக்குப் பக்குவப்பட்டிருந்தன. முடிவு வரையிலும் அவற்றை நிலையாகப் பின்பற்ற அவர் தைரியம் கொண்டிருப்பாரா? அதுதான் சோதிக்கப்படுதலானது பதில் தர வேண்டிய கேள்வியாக இருந்தது. இதற்கான திறவுகோலானது, அற்புத ஊழியம் செய்யும் அரசியல் ரீதியான மேசியாவை நோக்கியிருந்த யூதர்களின் எதிர்பார்ப்பில் காணப்பட வேண்டியதாக உள்ளது. சோதனைக் காரான் வெளிப்படையான வடிவத்தில் வந்தானா? அல்லது அவன் நம்மை உள்ளான மற்றும் பாவம் நிறைந்த ஆலோசனைகளினால் மிகவும் அடிக்கடி வெற்றிகரமாகத் தாக்குவது போல இயேசுவைத் தாக்கினானா? இதை நாம் ஒருக்காலும் அறியாமல் போகலாம். சோதனையானது மூன்று வடிவங்களில் வந்ததென்று நாம் அறிகின்றோம்:

*அ. உடல் ரீதியான பசியின் மூலம்.*—"இந்தக் கல்லுகள் அப்பங்களாகும் படி சொல்லும்"[8]; இது, (1) அவருடைய தந்தையின் கவனிப்பின்மீது நம்பிக்கையின்மை, (2) அவரது அற்புதம் செய்யும் வல்லமையைச்

*சுயத்திற்காகப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கான சோதனையாயிருந்தது. ஆனால் ஊழியம் கொள்வதற்கல்ல, ஊழியம் செய்வதற்கே"[9] வந்த அவர் தமது இயற்கைக்கு மேலான வரங்களை சுயநல நோக்கங்களுக்காக துஷ்பிரயோகம் செய்வதினால் தொடங்க மாட்டார்.*

*ஆ. தேவனில் அவர் கொண்டுள்ள நம்பிக்கையின் மூலம்.*—"நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்"[10] ஆனால் தேவனுடைய பராமரிப்பின்மீது அவ நம்பிக்கை கொள்ளாத ஒருவர், திரளான கூட்டத்தைத் திகைக்கச் செய்வதற்கு அந்தப் பராமரிப்பை முன் அனுமானம் செய்து கொள்ள மாட்டார்.

*இ. ஆளுகைக்கான அவருடை திட்டங்களின் மூலம்.*—இயேசு மேசியாவாக உள்ளார். அவர் இந்த பூமி முழுவதன் மீதும் ஆளுகை செய்ய வேண்டியவராய் இருக்கின்றார். "நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்து கொண்டால்"[11] ஆவிக்குரிய வழிமுறைகளினால் மெதுவாக வெற்றி கொள்ளக் காத்திராதே. மாம்சப் பிரகாரமான ஆயுதங்களைப் பயன்படுத்து. உன் மக்கள் மீதான பூமிக்குரிய நம்பிக்கைகளுடன் ஒப்பந்தம் செய்து கொள். உன்னால் வெற்றி கொள்ளப்பட முடியாத அரியணை எது? இது யானைப் பாகன் தனது பட்டயத்தை உருவிய பொழுது இணங்கிச் சென்ற சோதனையாகவும், சபையானது நிர்ப்பந்திக்கப்படுதலை ஒப்புக்கொள்ளும் பொழுதெல்லாம் இணங்கிச் செல்லுகின்ற சோதனையாகவும் இருந்தது.

இயேசு வெற்றி பெற்றார், சோதனைக்காரன் "சில காலம் அவரை விட்டு விலகிப் போனான்"[12] ஆயினும் பொறாமை கொண்ட வேதபாரகர்கள், யூதாஸ் மற்றும் சனதெரீன் சங்கத்தாரின் சூழ்ச்சிகள் மற்றும் சிலுவையைச் சுற்றிலும் ஆர்ப்பாட்டமிட்ட வெறுப்பு ஆகியவற்றின் வடிவில் அவன் மீண்டும் திரும்பி வந்தான். ஆனால் "எல்லா விதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராய் இருக்கிற" (எபி. 4:15) அவருடைய உறுதியான ஆத்துமாவிற்கெதிராக எவ்வித வல்லடிகளும் வெற்றி கொள்ள இயலாதிருந்தது.

---

குறிப்புகள்

[1]*லூக். 2:49.* [2]*லூக். 2:52.* [3]*அல்லது நாசிரித்.* [4]*மத். 3:2; 4:17; மாற். 1:14ஆ, 15ஐயும் காணவும்.* [5]*மத். 3:14.* [6]*மத். 3:17.* [7]Geikies "Life of Christ," Vol. 1., p. 413. [8]*மத். 4:3; லூக். 4:3.* [9]*மத். 20:28; மாற். 10:45.* [10]*மத். 4:6; லூக். 4:9.*

[11]*மத்.4:9; லூக். 4:7.* [12]*லூக். 4:13; மத். 4:11ஐயும் காணவும்.*